திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, எப்பொழுது கட்டப்படும் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நில எடுப்பு சட்டத்தின் படி 27–1–1981 அன்று 4.17 ஏக்கர் நிலமும், 11–3–1981 அன்று 0.31 ஏக்கர் நிலமும் கையகப் படுத்தப்பட்டுள்ளன. அதற்காக வருவாய்த் துறைக்குப் பணமும் செலுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே விரைவில் கட்டுமானப் பணி மேற்கொள்ளப்படலாம்.

சின்னதாராபுரத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 775—திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சின்னதாராபுரத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) 30–3–1981 ல் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் துவங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 776 முதல் 779 வரை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

அரசு மருத்துவ மனைகளிலுள்ள நுட்பமான கருவிகள்.

*வினா எண். 780—திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அரசு மருத்துவ மனைகளில் நுட்பமான கருவிகளை செப்பனிடத் தெரிந்தவர்கள் இல்லையென்பதால் ஏராளமாக செலவிட்டுத் தருவிக்கப்பட்ட பல கருவிகள் செயல்படாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அவை எப்பொழு செப்பனிடப்படும்,